**17.02.2026.**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.245/2025</u>

அ.சா.**2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிமலை | | |
| த/பெ | ரத்தினம் | | |
| கிராமம் | மேல் கரணை | தொழில் | ரயில்வே கேட் கீப்பர் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 42/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 17.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் கூட்டு ரோட்டில் இருந்து பண்ருட்டி செல்லும் சாலையில் உள்ள கோலியனூர் ரயில்வே கேட்டில் கோலியனூர் கேட் எண் எல் சி - 07 கேட்டில் கேட் கீப்பராக பணி செய்து வருகிறேன். கடந்த 08/03/2025-ம் தேதி மாலை 4.35 மணியளவில் நான் அதே பணியில் இருந்த போது, நான் ட்ரெயின் வருவதற்காக அலாரம் போட்டு கேட்டை இறக்கிக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் ஆம்புலன்ஸ் ஒன்று வந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் நான் 35 முதல் 40 சதவீத அளவில் கேட்டை இறக்கி விட்டேன். அப்போது ஆம்புலன்ஸ் ஒன்று பண்ருட்டி பக்கம் இருந்து அலாரம் ஒலித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தது. அந்த ஆம்புலன்ஸ் வாகனம் போவதற்காக நான் ஒரு

சில நொடிகள் கேட்டை இறக்குவதை நிறுத்தினேன். அப்போது பக்கத்தில் TN - 28 AP 9988 என்ற பதிவு எண் கொண்ட அசோக் லைலாண்ட் லாரி அதன் பின்னால் வந்தது. ஆம்புலன்ஸ் வாகனம் அளவில் சிறியது என்பதால் கேட்டிற்கு கீழே புகுந்து போய்விட்டது. அப்போது லாரி டிரைவர் ஆம்புலன்ஸ் போவதால் நாமும் போகலாம் என்று தனது வாகனத்தை ஓட்டினார். நான் சத்தம் போட்டு வாகனத்தை நிறுத்த கேட்டும், அவர் அதைக் கேட்காமல் அந்த கேட்டிற்குள் நுழைய முயன்று கேட்டின் பூமில் இடித்து பூம் உடைந்து அதன் பைப் ஆனது சென்னை மார்க்கமிருந்து பண்ருட்டி பக்கம் செல்வதற்காக எதிரில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில், பின்னால் அமர்ந்திருந்த ஒரு நபரின் தலையின் மீது விழுந்தது. உடனே அந்த இரு சக்கர வாகனத்தின் பின்புறம் அமர்ந்திருந்த நபர் ரத்தம் வழிந்த நிலையில், சரிந்து கீழே விழுந்துவிட்டார். உடனே அங்கிருந்தவர்கள் அவரை தூக்கினார்கள். ரத்த வெள்ளத்தில் அவர் சுயநினைவை இழந்தார். அவரை ஒரு பக்கமாக தூக்கிக்கொண்டு வந்து வைத்தார்கள். அதன் பிறகு நாங்கள் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தது. அவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றார்கள். அதன் பிறகு அவர் இறந்துவிட்டார் என்று நான் கேள்விப்பட்டேன். அந்த உடைந்த பைப்பை எனக்கு கொடுக்கப்பட்ட தனி அறையில் கொண்டு சென்று வைத்திருந்தேன். நான் இது சம்பந்தமாக விழுப்புரம் ஸ்டேஷன் மாஸ்டர் ராம சத்தியநாராயணன் என்பவருக்கு தகவல் கொடுத்தேன். அவர் உடனே அங்கிருந்து ஆட்களை அனுப்பி உடைந்த பூமை சரி செய்தார்கள். லாரி நான் சொல்லியும் நிறுத்தாமல், அஜாக்கிரதையாக, வாகனத்தை எடுத்து வந்து மோதியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது. லாரி ஓட்டுனருக்கு அந்த கேட் விழுந்தால் விபத்து ஏற்படும் என்பது நன்கு தெரிந்து தான் இதை செய்தார். அன்று இரவு 9:30 மணிக்கு விழுப்புரம் ரயில்வே ஆய்வாளர் வந்தார். அவர்கள் அந்த இடத்தை பார்த்துவிட்டு, பார்வை மகசர், வரைபடம்

வரைந்து விட்டு, என்னையும் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துவிட்டு, அதை என்னிடம் படித்துக் காண்பித்தார். என்னிடம் இருந்த துண்டு பைப்பை போலீசார் சாட்சிகள் முன்னிலையில் மகசர் தயார் செய்து, கைப்பற்றிக் கொண்டார்கள். அந்தப் பைப்பை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி அந்த பைப்பை சரியாக அடையாளம் காண்பித்தார். அந்த பைப் சா.பொ.1 ஆகும். இது சம்பந்தமாக ரயில்வே போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் நடந்ததை சொல்லிக் கொண்டேன்.

குறுக்கு விசாரணை:-

இல்லை.

மறுவிசாரணை

இல்லை.